**சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டம் - 2020**

சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மத்திய, கிழக்கு, சப்ரகமுவ, மேற்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள 06 வீதிகளின் 131.50 கிலோமீற்றர் பிரிவுகளினை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 10,628 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 81.75 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 7,800 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 60 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு அபிவிருத்திக்கான சவூதி நிதியம் இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2013 யூன் 03 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 ஒகஸ்ட் 05 இல் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 6 வீதிகளின் புனரமைப்பு வேலைகள் ரூபா 6இ885.8 மில்லியன் கிரயத்தில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் 2020 திசெம்பர் 31 வரை கூட அவைகள் பூர்த்தியாக்கப்பட்ட வேலைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் அச்செயற்திட்டங்களின் மிகுதி நடைமுறை வேலைகளை சிவில் வேலைகளிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்கள் மற்றும் பொதுதிறைசேறியினால் பராமரிக்கப்பட்ட பதிவுகள் என்பனவற்றின் பிரகாரம் மீளாய்வாண்டு காலப்பகுதியின் போது கடன் வழங்கள்களிலிருந்து பயன்படுத்தப்பட்ட மொத்த நிதிகள் ரூபா 368.74 மில்லியனாக இருந்தது. இருப்பினும் உரிய தொகை வெளிவளங்கள் திணைக்களத்தின் பதிவுகளில் ரூபா 194 மில்லியன் என காட்டப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ரூபா 302.37 மில்லியனான ஒரு தொகை 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கடனின் கீழ் பதிவுசெய்வதற்கு பதிலாக மீளப்பெறத்தக்க வெளிநாட்டு உதவியாக காட்டப்பட்டிருந்தது. எனவே கடன் வழங்கள்களின் பயன்படுத்தல் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக நிதிக்கூற்றுக்களில் முறையாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் மொத்த மீளப்பெறல்களை அரச கணக்குகள் திணைக்களத்திள் காட்டப்பட்டுள்ள மீளப்பெறல்கள் மற்றும் வெளிவளங்கள் திணைக்களத்தின் அறிக்கைகளில் காட்டப்பட்ட மீளப்பெறல்கள் என்பவற்றுடன் இணக்கம் செய்வதற்கான பட்டியல் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும். | உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்பட வேண்டியதுடன் வித்தியாசங்கள் குறைக்கப்படலும் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இற்கு முரணாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு மீது 1இ356 காணித்துண்டுகளிற்காக செலுத்தவேண்டிய தாமத வட்டிக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டில் வட்டி ஏற்பாட்டினை கணக்கிட நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| இல | உருப்படி | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பாலங்களின் புனர்நிர்மானம் மற்றும் மேம்படுத்தல். | ஒருகொடவத்த – அம்பத்தல மீதுள்ள பால இல 6.ே.2 இன் அகலப்படுத்தலின் நிர்மான வேலைகள் 2019 ஒக்டோபர் 11 இல் ஆரம்பிக்கப்பட்டு 2021 செப்டம்பர் 12 இல் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலக்கிடப்பட்ட 80 சதவீதத்திலிருந்து 26 சதவீத செயலாற்றல் மாத்திரமே அடையப்பட்டிருந்தது. | கோவிட் 19 நோய்ப்பரவல் நிலமை காரணமாக தளமானது மூடப்பட்டிருந்ததுடன் வேலை செய்யவுமில்லை. அதற்கு மேலதிகமாக பொதுப்பயன்பாடுகளை அகற்றுவதில் தாமதங்கள் கூட மேற்கூறிய தாமதத்தில் தாக்கம் செலுத்தியிருந்தது. | மிகுதி புனரமைப்பு வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பாலங்களின் | ஒரு கொடவத்த – அம்பத்தல மீதுள்ள | கோவிட் 19 நோய்ப்பரவல் | மிகுதி |

| | | | |
|---|---|---|---|
| புனர்நிர்மானம் மற்றும் மேம்படுத்தல். | பால இல 6.‌.1 இன் அகலப்படுத்தலின் நிர்மான வேலைகள் 2019 செப்டம்பர் 19 இல் ஆரம்பிக்கப்பட்டு 2021 மே 25 இல் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 62 சதவீத செயலாற்றல் மாத்திரமே அடையப்பட்டிருந்தது. | நிலமை காரணமாக தளமானது மூடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக பொதுப்பயன்பாடுகளை அகற்றுவதில் தாமதங்கள் கூட மேற்கூறிய தாமதத்தில் தாக்கம் செலுத்தியிருந்தது. | புனரமைப்பு வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

--------------------------------

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்களினை அனுமதிப்பதனூடாக வீதி புனரமைப்பு வேலைகள் மீது ஓர் வேறான கொடுப்பனவு உருப்படிகள் அளவைப்பட்டியல்களில் செய்யப்பட்டிருந்தமை ஒப்பந்தப்பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக காணப்பட்டது. அதன்படி கூட்டுமொத்தம் ரூபா 2.79 மில்லியன் ஒப்பந்ததாரர்களினால் பெறப்பட்ட செயறலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை மீளப்பெற 04 ஒப்பந்ததாரர்களிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் ஒப்பந்ததாரர் அவரது சொந்த கிரயத்தில் செயலாற்றல் பாதுகாப்பினை வழங்க வேண்டும். இருப்பினும் வழமையாக பீஓகியுவ் உருப்படி அதற்காக வழங்கப்படுவதுடன் இல்லாவிட்டால் ஒப்பந்ததாரர் இக்கிரயத்தினை வேறொரு பீஓகியுவ் உருப்படிகளிற்குள் உள்ளடக்க அல்லது மீளப்பெற வேண்டும். | அளவைப்பட்டியல்களின் மீளாய்வு விலைமனு ஆவணங்களை வழங்க முன்னர் பெறுகை நிபுனர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழு என்பவற்றினால் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | காணி சுவீகரிப்பு செயன்முறைகள் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தும்இ காணி சுவீகரிப்பு செயன்முறையானது இன்னும் நடைமுறையிலே உள்ளது. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1இ449 காணித்துண்டுகளிற்காக ரூபா 135.89 மில்லியன் தொகை இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்ததுடன் 27 காணித்துண்டுகளிற்காக ரூபா 7.8 மில்லியன் தாமத வட்டியாகவும் செலுத்தப்பட்டிருந்தமை வதானிக்கப்பட்டது. மேலும் செயற்திட்டமானது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட காணி சுவீகரிப்பு சட்டத்தின் உபபிரிவு 44 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் எவ்வித காணித்துண்டுகளையும் பதிவு செய்திருக்காமை அவதானிக்கப்பட்டது. | உடன்பட்டனர். | இழப்பீடுகளை செலுத்தி அதன் மீதான மேலதிக செலவுகளை தவிர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |